முருகப்பெருமான் துணை

**மகான் காரிநாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.12.2021, சனிக்கிழமை

1. பிரம்ம ரகசியம் கண்டு வந்த
பிரணவ மூர்த்தியின் அவதாரமே
வரம்பல பெற்று கலியிடரை
வதைத்து மீட்க ஞானியாக வந்தநல்
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
வள்ளலே உன் பெருமை கூறி
சிந்தைபட பிலவ தேள் திங்கள்
செப்பிட மூவாறு திகதி காரிவாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 18ம் நாள், 04.12.2021, சனிக்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசிதனை
வழங்குவேன் காரிநாயனார் யானும்
சோரமின்றி மக்கள் சமூகம்
சுத்தநெறி வழி சித்தி காண
4. காணவே சன்மார்க்கம் எனும்
கந்தவேலன் நெறி பரவியே
ஞானபூமியாக உலகம் மாற
நம்பிக்கையூட்டி அருளும்அரங்கன்
5. அரங்கன் வழிக்கு வரவேண்டும்
அகிலத்தார் பணிந்து வர
வரங்களாக சக்தி பெருகி
வருபவர்கள் நெடிய ஆயுளும்
6. ஆயுளுடன் அதி வளமும்
ஆனந்த வாழ்வு நிலையும்
தயவான மன பலமும் திடமும்
தரும குணமும் நிரம்பி வாழ்வர்
7. வாழ்வினில் அரங்கன் தரும்
வரமான அருளமுது உண்டுவர
ஊழ் கரைந்து முழுமைபட விலகி
உண்மைபட சத்தியவான்கள் ஆக
8. ஆகவே கலியுகம் தன்னில்
ஆறுமுகனார் வழிபாடு செய்து
செகம் வெல்லும் வரங்கள்
சூட்சும சக்தியாக அடைந்துமே
9. அடைந்துமே ஞானிகள் ஆவர்
அறமெனும் அன்னதானமதை
தடையற உலகோர் செய்துவர
தவபலமாக அறத்தின் பலமாகச் கூடி

10. கூடியே ஞானயுகப் படைப்பை
குருவரங்கள் துணைபடவே
நாடியே அற்புதம் தன்னை
ஞானவழியில் உலகோர் அடைவர்

11. அடையவே பிரணவக் குடிலே
அகிலம் மாற்றும் ஞானக் குடில்
தடைபடா தொடர்ந்து வருக
தரணியே பெருமாற்றம் காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–